ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2307/09 - 2022 නොවැම්බර් මස 21 වැනි සඳුදා - 2022.11.21

*2307/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம் 27(அ) என்னும் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை**

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27(அ) என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரான ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் இக் கட்டளையின் மூலம்,*

*(அ) 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுமான, இதற்கான முதலாம் அட்டவணையில் இன்னும் விபரமாக விவரிக்கப்பட்ட தெல்தொட்ட (கல்லன்தென்ன பஹல மற்றும் இஹல பெல்வுட்) என்று அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் தோட்ட காணி சம்பந்தமான 1988, ஒகத்து 05 ஆந் திகதிய 517/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான, 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த சட்டத்தின் 22 (அ) (1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுமான தெல்தொட்ட வத்தை காணி, தெல்தொட்ட வத்தை க்ருப் (கல்லன்தென்ன பகுதி) காணிப்பரப்பு தொடர்பான அத்தகைய காணிப் பகுதியை, அந்த சபைக்கு உரித்தாக்குவதற்கான நிதி முதலீட்டுக்குரிய கட்டளை அல்லது நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படுத்தப்படாத காரணமாக அத்தகைய நியதிகள் இல்லாதொழிப்பதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்; மற்றும்*

*(ஆ) இந்த இல்லாதொழிப்பதன் பின்னர் இதற்கான இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் விபரிக்கப்பட்டதுமான காணி அளவினை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையளிக்கப்படுவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

1A - G 38124 — 09 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாவது அட்டவணை**

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கப்பட்டதுமான தெல்தொட்ட (கல்லன்தென்ன பஹல மற்றும் இஹல பெல்வுட்) என அறியப்படும் காணியின் விபரம்

| *அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கமும் திகதியும்* | *தோட்டக் காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கப்பட்ட காணியின் அளவு ஹெக்டயார்* |
|---|---|---|---|---|
| இலக்கம் 517/20 1988.08.05 | தெல்தொட்ட (கல்லன்தென்ன பஹல மற்றும் இஹல பெல்வுட்) | கண்டி | தெல்தொட்ட | 414.50 |

**இரண்டாவது அட்டவணை**

| *விசேட இலக்கம்* | *காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுகின்ற காணியின் அளவு ஹெக்டயார்* |
|---|---|---|---|---|
| 11/ PCE/ KD/ 18 | தெல்தொட்ட வத்தை காணி, தெல்தொட்ட வத்தை க்ருப் (கல்லன்தென்ன வத்தை) | கண்டி | தெல்தொட்ட | மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்திலுள்ள தெல்தொட்ட பிரதேச செயலாளர் பிரிவில் உட தெல்தொட்ட (976) கிராம அலுவலர் பிரிவில் உட தெல்தொட்ட கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ஏ. எஸ். கே. லியனகே அவர்களால் 2022.06.25 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 0096 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இல. 1, 2 மற்றும் 3 எனக் காட்டப்பட்ட 6.0702 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்வரும் எல்லைகளில் உள்ள தெதொட்ட வத்த காணி, தெல்தொட்ட க்ருப் (கல்லன்தென்ன பகுதி) எனும் காணித் |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| *விசேட இலக்கம்* | *காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுகின்ற காணியின் அளவு ஹெக்டயார்* |
|---|---|---|---|---|
| | | | | துண்டுகளின் எல்லை விபரம் - துண்டு இல. 1 இல் 2.0234 ஹெக்டயார் விஸ்தீரணம் வடக்கு: 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி மற்றும் கல்லன்தென்ன ஓயாவும், கிழக்கு : கல்லன்தென்ன ஓயாவும், 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 2 வும், தெற்கு : இந்த வரைபடத்தில் துண்டு இல. 2 மற்றும் நுழையும் வீதியும். மேற்கு : நுழையும் வீதி, 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி மற்றும் கல்லன்தென்ன ஓயாவும், துண்டு இல. 2 இல் 2.0234 ஹெக்டயார் விஸ்தீரணம் வடக்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. 1 மற்றும் 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதியும் கிழக்கு : 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 3 உம், தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. 3 மற்றும் நுழையும் வீதியும், |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| *விசேட இலக்கம்* | *காணியின் பெயர்* | *நிர்வாக மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படுகின்ற காணியின் அளவு ஹெக்டயார்* |
|---|---|---|---|---|
| | | | | மேற்கு : நுழையும் வீதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 1 உம் துண்டு இல. 3 இல் 2.0234 ஹெக்டயார் விஸ்தீரணம், வடக்கு: இந்த வரைபடத்தில் துண்டு இல. 2 மற்றும் 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதியும், கிழக்கு: 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதியும், தெற்கு : 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி மற்றும் நுழையும் வீதியும், மேற்கு : 44057 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் எஞ்சிய பகுதி நுழையும் வீதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 2 |

**ஹரின் பெர்னாண்டோ,**
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6,
இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை, கொழும்பு,
2022, நவெம்பர் 16.

EOG 11-0245